**இறைத்தூதன்**
கத்தோலிக்க வார இதழ்

நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்துவிட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். (கொலோ 3:1-3)

# எழுவோம், எழுச்சியுறுவோம்!



## பேராயரின் பாஸ்கா பெருவிழா செய்தி 2021

### பேராயரின் பாஸ்கா பெருவிழா செய்தியின் சுருக்கம்

கிறிஸ்துவில் என் அன்பார்ந்த சகோதர-சகோதரிகளே,

இந்த கோவிட்-19 தொற்று காலத்தில், இது நாம் கொண்டாடும் இரண்டாவது பாஸ்கா பெருவிழாவாகும். கடந்தாண்டு நடமாட்டக்கட்டுப்பாட்டின் காரணமாக, புனித வாரத்தில் நம்மால் திருப்பலிகளைக் கொண்டாட இயலாமல் போனது. ஓராண்டுக்குப் பின்னும் இந்நிலை தொடர்ந்தாலும் நமக்கு நல்ல எதிர்நோக்குக் கிடைத்துள்ளது. இப்போது நிலைமை ஓரளவு தேரிவருகிறது. பாஸ்கா முப்பெரும் கொண்டாட்டத்திற்கு ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

'கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே' என்று புனித பவுல் அடிகளும் நமக்கு நினைவூட்டுகிறார் (1 கொரி 15:17). ஆகவே, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மீதான இந்த நம்பிக்கையை நாம் உறுதியாகப் பற்றிக் கொண்டால், நாமும் கிறிஸ்துவில் கொண்ட எதிர்நோக்குடன் உயிர்த்தெழுவோம்.

இயேசுவின் இந்த பாஸ்கா வெற்றியானது, சிலுவையின்றி அடையப்பட்ட வெற்றி அல்ல. இயேசு. திருப்பாடுகள் மரணம் ஆகியவற்றிலிருந்துத் தப்பி ஓடவில்லை. அவர் அதைத் தழுவினார், அதுவே அவரை வேறுபடுத்திக் காட்டியது. நம்முடைய போராட்டங்களின் மூலம் தினமும் நம் சிலுவைகளை மகிழ்ச்சியுடன் தாங்கிக் கொண்டிருக்கும் கிறிஸ்துவோடு நாம் தொடர்ந்து இணைந்திருப்பதோடு, அவரது இரண்டாவது வருகைக்காக மகிழ்ச்சியுடனும் எதிர்நோக்குடனும் ஆர்வத்தோடு காத்திருக்கவும் வேண்டும். அவர் நம்மை மீட்பார், அவர் நம்மை காப்பாற்றுவார். அவரே நமது எதிர்நோக்கும் உயிர்ப்புமாகும்.

நாம் இந்த சவால்மிக்கக் காலத்தில், சவால்களை ஏற்று எழுந்து கடவுளின் அழைப்புக்கு ஏற்ப செயல்பட போகிறோமா? அல்லது வெறுமனே உட்கார்ந்து தொற்றுநோய் முடிவுக்கு வரும் வரை காத்திருக்கப் போகிறோமா? தவக்காலம் இப்போது முடிந்துவிட்டது. அந்த காலகட்டத்தில் நம்மில் பலர் தவத்தின் மூன்று பணிகளான, இறைவேண்டல், நோன்பு மற்றும் தர்மம் செய்வதில் உண்மையாக இருந்தோம். ஆனால் இப்போது தவக்காலம் முடிந்துவிட்டதால், நாம் இறைவேண்டலை, நோன்பை அல்லது தர்மம் செய்வதை நிறுத்த வேண்டும் என்று அர்த்தமல்ல.

*பேராயரின் முழு செய்தியை வலது பக்கத்தில் காணலாம்.*

கிறிஸ்துவில் என் அன்பார்ந்த சகோதர-சகோதரிகளே,

நம் ஆண்டவர் இயேசுவே நமது எதிர்நோக்குக்கும் மீட்புக்கும் உரியவராவார். அவர் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்! பாஸ்கா பெருவிழா திருவிழிப்பு திருவழிபாட்டில் திருஅவை உலகெங்கும் சிதறிக்கிடக்கும் அவரது மக்களை ஒன்றாகக் கூடிவந்து வழிபட அழைக்கிறது. ஆண்டவரின் பாஸ்காவை நினைவுகூர்வதானது, அவரது வார்த்தைக்குச் செவிசாய்த்து, அவரது உயிர்ப்பைக் கொண்டாடுவதன் மூலம், சாவின் மீதான அவரது வெற்றியில் பங்குபெறும் எதிர்நோக்கோடு அவரில் வாழ்வதாகும்.




இந்த சிறப்பு வாய்ந்த பாஸ்கா திருவழிபாட்டில், இயேசு கிறிஸ்துவின் உடல், இரத்தம், ஆன்மா மற்றும் அவரது தெய்வீகம் ஆகியவற்றில் எதிர்நோக்குக் கொண்டிருக்க நினைவூட்டப்படுகிறோம். அவரில் மட்டுமே நமது எதிர்நோக்கும் மீட்பும் உள்ளது. திருஅவையின் திருவழிபாட்டு காலத்தில் எதிர்நோக்கு என்பது நிலையான மற்றும் தொடர்ச்சியான கருப்பொருளாக உள்ளது. ஏனெனில், கிறிஸ்துவுக்கான எதிர்நோக்கு நற்செய்தியின் மையமாக உள்ளது. தவக்காலத்தின் தொடக்கத்தில், இன்றைய நிலைத்தன்மையற்ற சூழலிலும் இந்த புனித காலமே நமது எதிர்நோக்கிற்கான காலம் என்றார்.

இந்த கோவிட்-19 தொற்று காலத்தில், இது நாம் கொண்டாடும் இரண்டாவது பாஸ்கா பெருவிழாவாகும். கடந்தாண்டு நடமாட்டக்கட்டுப்பாட்டின் காரணமாக, புனித வாரத்தில் நம்மால் திருப்பலிகளைக் கொண்டாட இயலாமல் போனது. ஓராண்டுக்குப் பின்னும் இந்நிலை தொடர்ந்தாலும் நமக்கு நல்ல எதிர்நோக்குக் கிடைத்துள்ளது. இப்போது நிலைமை ஓரளவு தேரிவருகிறது. பாஸ்கா முப்பெரும் கொண்டாட்டத்திற்கு ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. தடுப்பூசிகளும் மலேசியாவை வந்தடைந்துள்ள வேளையில், தடுப்பூசி போடும் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளது. இந்த தொற்று இத்தோடு ஒரு முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கையும் தலைத்தூக்கியுள்ளது. நீங்களும் நானும் இந்த தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள காத்திருக்கிறோம். அத்தோடு, சீரான சூழலுக்கான ஒளியும் தெரிகிறது.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுடன் ஒப்பிடுகையில் இந்த நம்பிக்கை அவசியம் என்றாலும், கிறிஸ்து தமது மணமகளான திருஅவைக்கு அருளும் நம்பிக்கை மேலும் மகத்தானது. ஆனாலும், கிறிஸ்து நமக்கு அளிக்கும் இந்த நம்பிக்கை, சோதனைகள், துன்பங்கள் மற்றும் சிலுவையிலிருந்து விடுதலை என்று கருதுவதற்கில்லை. மாறாக, இந்த புனித வாரத்தில் மட்டுமல்ல, அதன் பின் வரும் நமது வாழ்நாளெல்லாம் நாம் மகிழச்சிக்குரியவர்- களாக, பாஸ்கா மக்களாக வாழ வேண்டும். இந்த மகிழ்ச்சியைப் பிறரோடும் பகிர வேண்டும்.

இயேசுவின் இந்த பாஸ்கா வெற்றியானது, சிலுவையின்றி அடையப்பட்ட வெற்றி அல்ல. இயேசு. திருப்பாடுகள் மரணம் ஆகியவற்றிலிருந்துத் தப்பி ஓடவில்லை. அவர் அதைத் தழுவினார், அதுவே அவரை வேறுபடுத்திக் காட்டியது. அதனால்தான் அவர் நமது ஆண்டவரும் தலைவருமாகவுள்ளார்.

கிறிஸ்து தமது சிலுவையிலும் உயிர்த்தெழுதலிலும் அடைந்த வெற்றி, பாவத்திற்கும் மரணத்திற்குமான வெற்றி. அது நமது மனித வாழ்க்கையில் நேரிடும் தற்காலிகமான துன்பத்தைத் துடைத்தொழிக்காது. அவருடைய உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சி அவருடைய திருத்தூதர்களுக்கும் உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் காலம் காலமாக நம்பிக்கையை அளித்து வருகிறது.

விண்ணகத்திலுள்ள புனிதர்கள் கூட்டத்தாரும் நம் இறைவனைப் பின்தொடர்ந்தவர்கள். அவ்வாறே, பல நாடுகளில் உள்ள நாமும் இன்றும் பின்பற்றுகிறோம். பல்வேறு வகையான துன்பங்களையும், சிலுவைகளையும் தழுவிக்கொண்டு, அவருடன் விண்ணகத்தில் மகிழ்ச்சியான நிலைவாழ்வை எதிர்நோக்கி பயணிக்கிறோம்.

மறைந்தத் திருத்தந்தை புனித 2-ம் ஜோன் பவுல், அவரது தலைமைப்பீட காலம் முழுவதும் துன்பங்களை ஏற்று வாழ்ந்ததைக் கண்டிருக்கிறோம். "உயிர்த்தெழுதலில் முற்றிலும் புதிய ஒளியைக் காண்கிறோம்" என்று அவர் நமக்குப் புலப்படுத்தினார். இது அவமானங்கள், சந்தேகங்கள், நம்பிக்கையற்ற தன்மை மற்றும் துன்புறுத்தல் ஆகியவற்றின் ஊடே இருளைக் கடந்து முன்னோக்கிச் செல்ல நமக்கு உதவியாக இருக்கிறது.

'கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே' என்று புனித பவுல் அடிகளும் நமக்கு நினைவூட்டுகிறார் (1 கொரி 15:17). ஆகவே, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மீதான இந்த நம்பிக்கையை நாம் உறுதியாகப் பற்றிக் கொண்டால், நாமும் கிறிஸ்துவில் கொண்ட எதிர்நோக்குடன் உயிர்த் தெழுவோம். நம்முடைய போராட்டங்களின் மூலம் தினமும் நம் சிலுவைகளை மகிழ்ச்சியுடன் தாங்கிக்கொண்டிருக்கும் கிறிஸ்துவோடு நாம் தொடர்ந்து இணைந்திருப்பதோடு, அவரது இரண்டாவது வருகைக்காக மகிழ்ச்சி யுடனும் எதிர்நோக்குடனும் ஆர்வத்தோடு காத்திருக்கவும் வேண்டும். அவர் நம்மை மீட்பார், அவர் நம்மை காப்பாற்றுவார். அவரே நமது எதிர்நோக்கும் உயிர்ப்புமாகும்.

அன்பார்ந்த சகோதரமே, புனித இரண்டாம் ஜோன் பவுல் அவர்கள் அவரது இரு நூல்களான 'எழுங்கள், நமது வழியில் செல்வோம்' மற்றும் ' எதிர்நோக்கின் வாசலைக் கடப்போம்' ஆகியவற்றில் அவர் பயன்படுத்திய 'எழுவோம், எதிர்கொள் வோம்' ஆகிய இரு சொற்களும், நமக்கு உந்துதல் அளிக்கும் சொற்களாக உள்ளன.

*தொடர்ச்சி அடுத்தப் பக்கம்...*

## பேராயரின் பாஸ்கா பெருவிழா செய்தி

*முதல் பக்கத் தொடர்ச்சி..*

அத்தோடு, நாம் மேற்கொள்ளும் நம்முடைய வாழ்க்கை, நம்பிக்கை, நற்செயல்கள் மூலமாகவும் அவர்களுக்குக் கடவுளின் முகத்தைக் காட்ட வேண்டும். கடவுளின் அன்பு உண்மையானது என்பதை அவர்கள் கண்டுணரட்டும். அது நம் ஒவ்வொருவரின் வழியாகவும் வெளிப்படட்டும்.

என் அன்பு நண்பர்களே, இந்த தொற்று நோயின் போது நாம் அனுபவித்த அனைத்தும், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் பாஸ்காவின் அனுபவம் வாயிலாக நம் அனைவருக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தட்டும். நாம் பாஸ்காவின் மக்கள். எனவே அல்லேலூயா நமது தொடர் பாடலாகட்டும்.

உங்கள் அனைவருக்கும் ஆசீர்வதிக்கப் பட்ட மற்றும் புனித பாஸ்கா பெருவிழா வாழ்த்துக்கள் உரித்தாகுக. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைப் பற்றிய நமது அனுபவம் நம்பிக்கையின் ஆதாரமாக இருக்கட்டும். மேலும், நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு நம்பிக்கையின் தூதுரைப் பணியாளர்களாகச் செயல்பட எழுவோம்.

*பேராயர் ஜூலியன் லியாவ் பெங் கிம்*
*D.D.*
*கோலாலம்பூர் மாமறைமாவட்டம்*

## இந்தோனேசிய பேராலயம் முன்பு இடம்பெற்ற வெடிகுண்டு

**வத்திக்கான்**: புனித பேதுரு பேராலயத்தில் நிகழ்த்திய குருத்தோலை ஞாயிறு திருப்பலியின் இறுதியில் நண்பகல் மூவேளை செப உரையை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்தோனேசியாவில், மார்ச் 28, ஞாயிறன்று காலையில், மக்காசார் பேராலயத்தின் முன்பாக இடம்பெற்ற வெடிகுண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்காக இறைவேண்டலில் ஈடுபட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்தோனேசியாவின் மக்காசார் நகர் பேராலய வளாகத்தினுள், அதன் ஒருபக்க வாசல் வழியாக நுழைய முயன்ற இருவர் தடுக்கப்பட்டபோது,



அவர்கள் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டு வெடித்ததில் 14 பேர் காயமடைந்துள்ளனர். இரு சக்கர வாகனத்தில் வந்து, குருத்தோலைத் திருப்பலியின் இறுதியில் கோவில் வளாகத்தினுள் நுழைய முயன்ற இரு தற்கொலைப் படையினர், கோவில் காவலர்களால் தடுக்கப்பட்டபோது, குண்டு வெடித்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளனர். இத்தாக்குதல் குறித்து தன் வன்மையான கண்டனத்தை வெளியிட்ட இந்தோனேசிய மத விவகாரத்துறை அமைச்சர் யாகுட் சோலில் குவாமாஸ் அவர்கள், மக்களுக்கு தீங்கைக் கொணரும் இத்தகைய தாக்குதல்களை எந்த மதங்களும் நியாயப்படுத்தப்படுத்த முடியாது என தெரிவித்துள்ளதுடன், அனைத்து மத வழிபாடுகளுக்கும் உரிய பாதுகாப்பை உறுதிச் செய்யுமாறு காவல்துறைக்கு கட்டளையிட்டுள்ளார்.

## கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் மறைக்கல்விக்கான உருவாக்கப்பயிற்சி

**கோலாலம்பூர்**: கடந்த பிப்ரவரி, மார்ச் ஆகிய இரு மாதங்களில் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின், மறைக்கல்வி பணிக்குழு மறைக்கல்விக்கான 26 தொடர் உருவாக்கப்பயிற்சிகளை இயங்கலை வழியாக மேற்கொண்டது. ஆங்கிலம், மலாய், மென்டரின், தமிழ் என நான்கு மொழிகளிலும் நடைபெற்ற இப்பயிற்சியில் மறைக்கல்வி ஆசிரியருக்கான இறையழைத்தலும், தூதுரைப் பணியும், அவர்களது ஆன்மீகம், ஆக்கப்பூர்வமான இயங்கலை வழி போதனை போன்ற தலைப்புகள் இடம்பெற்றன.

இப்பயிற்சியில் புதிய, பழைய மறைக்கல்வி ஆசிரியர்கள் கலந்துகொண்டது தமக்கு மகிழச்சியளிப்பதாக மறைக்கல்வி பணிக்குழுவின் இயக்குனர் Dr.செல்வராஜூ அவர்கள் கூறினார். மேலும் கடந்த 2018-ல் ஓராண்டுக்காலம் நடைபெற்ற மறைக்கல்வி பயிற்றுனர் பயிற்சியில் கலந்துகொண்டோரால் இப்பயிற்சி நடத்தப்பட்டது என்றும் அவர் மேலும் விவரித்தார்.

தொடர்ந்து, இந்த தொற்றுநோய் நடமாட்டக்கட்டுப்பாட்டுக் காலத்தில், பேராயர் ஜூலியன் லியாவ் மற்றும் மறைக்கல்விக்கான ஆலோசகர் அருள்தந்தை கிறிஸ்தபர் சூசைபிள்ளை ஆகியோரின் ஆதரவில், இல்லம் சார்ந்த மறைக்கல்வி பாடங்களும் நான்கு மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு வாரந்தொறும் அனுப்பப்பட்டு வருகிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

## 2019-ல் உலக கத்தோலிக்கரின் வளர்ச்சி 1.12 விழுக்காடு உயர்வு

வத்திக்கான்: 2019-ம் ஆண்டின் நிலவரங்கள் குறித்த முழு விவரங்களைத் தொகுத்து வழங்கியுள்ள வத்திக்கான், 2019-ம் ஆண்டில், உலகெங்கும், 134 கோடியே 50 இலட்சம் கத்தோலிக்கர்கள் இருந்ததாகவும், இந்த எண்ணிக்கை, அதற்கு முந்தைய ஆண்டைவிட, 1 கோடியே 60 இலட்சம் அதிகம் எனவும் தெரிவிக்கிறது.

ஆனாலும், உலகின் மொத்த மக்கள் தொகையோடு ஒப்பிடும்போது, கத்தோலிக் கர்களின் எணிக்கை, 17.7 விழுக்காடு என்ற அளவில், ஒரே சீராக இருந்து வருவதாகவும், ஐரோப்பாவில் கத்தோலிக்கர்களின் வளர்ச்சி விகிதம் குறைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ம் ஆண்டில், உலகில், 5364 ஆயர்கள் இருந்ததாகவும், இது, அதற்கு முந்தைய ஆண்டைவிட 13 குறைவு எனவும், உலகின் ஆயர்களுள், 68.8 விழுக்காட்டினர், ஐரோப்பா, மற்றும் அமெரிக்கக்கண்டத்தில் இருந்ததாகவும், ஆசியாவில் 15.2 விழுக்காடு, ஆப்ரிக்காவில் 13.4 விழுக்காடு, மற்றும் ஓசியானியாவில் 2.6 விழுக்காடு ஆயர்கள் இருந்ததாக வத்திக்கான் அறிக்கையேடு மேலும் கூறுகிறது.

*-கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்*



**இறைத் தூதன் வாசகர்கள் அனைவருக்கும் பாஸ்கா பெருவிழா நல்வாழ்த்துகள்.**

**'எழுவோம் எழுச்சியுறுவோம்!**

## ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே!

இன்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். இந்த மாபெரும் வரலாற்று நிகழ்வு நடைபெறவில்லையென்றால் நாம் இன்று கிறிஸ்துவர்கள் என்று அழைக்கப் பட்டிருக்க மாட்டோம். நம்முடைய முதல் பெற்றோரால் இழந்துபோன விண்ணக வாழ்வை, இயேசு தம்முடைய கீழ்ப்படிதலால் அவருடைய விலைமதிப் பில்லாத இரத்தத்தால் விண்ணகத்தை நமக்கு மீட்டுக்கொடுத்தார். ஆகவே, நாம் அக்களிப்போம்; இன்று அகமகிழ்வோம்"

இன்றைய முதல் வாசகத்தில் திருத்தூதர் பேதுரு, மக்கள் முன் தம்முடைய சாட்சியங்களை முன்வைக்கிறார். . யூதக் கலாச்சாரத்தில் எதற்கும் சாட்சிகள் இரண்டுபேர் கட்டாயம் இருக்கவேண்டும். ஆனால் இங்கு பதினோரு பேர் இயேசுவின் உயிர்ப்புக்குச் சாட்சியம் பகிர்கின்றார்கள். இந்த சாட்சிகளும் அவரோடு உண்டு, குடித்து, உறவாடிய திருத்தூதர்களே என்று கேட்ட மக்கள் திருத்தூதர்களின் சாட்சியத்தையும் அவர்கள் எடுத்துக்கூறிய இயேசுவையும் ஏற்றுக்கொண்டனர். இயேசு தாம் உயிரோடு வாழ்ந்த காலத்தில் அறிவித்த பாவமன்னிப்பை, திருத்தூதர்களும் எடுத்துரைக்கின்றனர்

இரண்டாம் வாசகத்தில் உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்த பவுல், கிறிஸ்துவே வாழ்வு அளிப்பவர்; ஆகவே மேலுலகத்தைச் சார்ந்தவற்றையே நாடுங்கள் என்று அறிவுறுத்துகின்றார். உலக முடிவில் இயேசு தீர்ப்பளிக்க வரும்போது, அவரோடு இருந்தவர்களாய், மாட்சி பொருந்தியவர்களாய் நாம் இருப்போம் என்று இறைவாக்கு உரைக்கின்றார். ஏனென்றால் இயேசு கிறிஸ்து நேற்றோ, இன்றோ மட்டுமல்ல; என்றுமே மாறாதவர். எக்காலத்திற்கும் உரியவர். ஆகவே தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வு இன்றும் ஒவ்வொரு முறையும் நம்மால் நினைவுகூரப்பட்டு, புத்தம் புதிது போல் புதுப்பிக்கப்படுகிறது.

இன்று நாம் கொண்டாடும் கிறிஸ்துவின் உயிர்ப்புப்பெருவிழா நமக்கெல்லாம் பல்வேறு பரிமாணங்களைக் காட்டுகின்றது. யோவான் நற்செய்தியில் இந்த உயிர்ப்புச் செய்தியை அதாவது இயேசு கல்லறையில் இல்லையென்ற செய்தியை முதலில் மகதலா மரியா திருத்ததூதர்களிடம் அறிவிக்கின்றார். அந்த செய்தியைக் கேட்ட பேதுருவும் யோவானும் கல்லறைக்குச் சென்று, கண்டு, நம்பினார்கள். இயேசு தாம் வாழ்ந்த காலத்தில் பழமைவாதிகளான யூதர்களுக்கு மத்தியில் ஒரு புரட்சியாளராகத் தான் வாழ்ந்துகாட்டினார். இறந்து உயிர்த்த பின்னும், தம்முடைய உயிர்ப்புச் செய்தியை யூதக் கலாச்சாரத்தில் மதிப்புக்குறைவான பெண்களின் வழியாக பறைசாற்றுகின்றார்.

இயேசுவில் நம்பிக்கை வைப்பதும், அவருடைய சீடர்களாகப் பணி செய்வதும் ஆண் பெண் என்ற பேதமின்றி அந்த உரிமையையும், பொறுப்பையும் அனைவருக் கும் தருகின்றார். அன்றுவரை வாரத்தின் கடைசி நாளான சனிக்கிழமையன்று கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஓய்வுநாள் இயேசுவின் உயிர்ப்பினால் வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை நம்முடைய புதிய ஓய்வு நாளாக மாறியது. விலக்கப்பட்ட கல்லே வீட்டிற்கு மூலைக்கல் ஆயிற்று. இயேசுவே நம்முடைய நம்பிக்கையின் ஆதாரம்.

இயேசுவின் உயிர்ப்பு மெய்யானது என்பதை பல்வேறு சான்றுகளின் வழியாக அறிந்த நாம், இயேசுவின் உயிர்ப்பை எப்படி அர்த்தமுள்ளதாக்கப் போகின்றோம் என்று சிந்தித்துச் செயல்பட அழைக்கப் படுகிறோம். இயேசுவின் உயிர்ப்புக்கு இன்று நாமே சாட்சிகள். நாம் இயேசுவின் உயிர்ப்புக்குச் சாட்சிகளாகச் திகழ வேண்டும் என்றால், இயேசு உயிர்த்துவிட்டார் என்று அறிந்திருப்பது மட்டும் போதாது, அறிந்ததை அடுத்தவருக்கு அறிவிக்கவேண்டும். அதனை நம்முடைய வாழ்வாக்கவேண்டும். அப்போது தான் நாம் இயேசுவின் உயிர்ப்புக்கு சாட்சிகளாகத் திகழ முடியும்.

உயிர்ப்பு உன்னதமானது. ஆண்டவர் உயிர்த்தார் என்பதனால் தான் நம்முடைய விசுவாசம் உறுதிப் பெறுகின்றது என்பதை மனதில் நிறுத்துவோம். இயேசு நம்மில் எதிர்ப்பார்ப்பதும் இது தான். எனவே, தொடர்ந்து, அன்பை விதைப்போம்; அதையே வளர்ப்போம்; அறுவடை செய்வோம். இதனால் நாம் அவரின் சீடர்கள் என்று உலகம் அறிந்து கொள்ளட்டும்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**பாஸ்கா பெருவிழா**
திப: 10: 34a, 37-43
திபா: 118: 1-2. 16-17. 22-23
கொலோ:3: 1-4
யோவான்: 20: 1-9
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : பாஸ்கா பெருவிழா**